# தமிழிசை

கலை என்பது மக்களின் வாழ்வியல், பண்பாடு, நாகரிகம் என்பவற்றை எடுத்துக்காட்டும். தமிழர் கலைகளை அறுபத்து நான்காகப் பகுத்துள்ளனர். சிற்பம், ஓவியம், இசை, நடனம், நாடகம் அவற்றுட் சிலவாகும். இவற்றை அழகுக்கலை அல்லது நுண்கலை என்பர். அழகுக்கலைகளில் இசைக்கலை சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. செவிவழியாக நுகரப்படும் இசை உயிர்களைத் தன்பால் ஈர்த்து இசைய வைப்பதால் அதற்குத் தமிழர் இசை எனப் பெயரிட்டனர்.

ஒளியில் ஏழு வகையான நிறங்கள் இருப்பது போல் ஒலிகளும் ஏழு வகையாக இயங்குகின்றன. இவ்வொலி வகைகளுக்கு எமது முன்னோர் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனப் பெயரிட்டனர். இவ்வொலிகளைக் குறிப்பதற்கு முறையே ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழு நெட்டெழுத்துகளையும் பயன்படுத்தி வந்தனர். இப்பொழுது அவை வடமொழியால் ச, ரி, க, ம, ப, த, நி எனப்படுகின்றன.

பழந்தமிழில் இசைக்கெனப் பல இலக்கண நூல்கள் இருந்தமையை இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. அவை காலத்தாலும் காப்பின்மையாலும் அழிந்து போயின. ஆனால் கல்வெட்டுகளாலும், குகை ஓவியங்களாலும் அறியப்படும் தமிழிசை பற்றிய செய்திகள் அழிக்க முடியாத சான்றுகளாக இன்றும் உள்ளன. கல்வெட்டுக்கள் தமிழ் நாட்டில் அரசலூர் மலையடிப்பட்டி, திருமயம், குடுமியாமலை ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் ஐந்து இசைத்தூண்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் இருபத்திரண்டு மெல்லிய தூண்களால் ஆனது. அத் தூண்களில் மெல்லெனத் தட்டினால் ஒவ்வொரு தூண்களும் வெவ்வேறு இசையை ஒலிக்கும். அதே போன்று நெல்லையப்பர் கோவிலிலும், மதுரை ஆயிரங்கால் மண்டபத்திலும் ஓர் அன்னப்புள்ளின்

கற்சிலை உள்ளது. அதில் தட்டினால் ஒவ்வொரு இடங்களிலும் வெவ்வேறு இசை ஒலிக்கும். இவ்வாறு கல்லிலே இசை ஒலிக்க வைக்கும் இசை நுட்பத்தைத் தமிழர் அறிந்திருந்தனர்.

கி.பி இரண்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட சிலப்பதிகாரத்தில் மிக ஆழமாக இசை நுணுக்கம் பற்றிக் கூறப்பட்டுள்ளது. சிலப்பதிகாரத்தின் அரங்கேற்று காதையிலே கூறப்பட்ட இசைக்கருவிகள் தமிழருடைய இசைத் தொன்மைக்குச் சான்றாகும். தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி என இசைக் கருவிகளை தமிழர் நான்காக வகுத்துள்ளனர். அவற்றை கைகளால் கொட்டுதல்,தட்டுதல், சுண்டுதல் வாயால் ஊதுதல், பாடுதல் ஆகிய பல்வேறு வழிகளால் தமிழர் இசை எழுப்பினர் என்பது பற்றியும் இந்நூலில் கூறப்பட்டுள்ளது. தமிழர் 11991 வகையான இசைகளை வகுத்துள்ளனர். இசை முத்தமிழின் ஒரு உறுப்பாகும். இவை அனைத்தும் எம் முன்னோரின் இசைப் பேரறிவுக்கு அசைக்க முடியாத சான்றுகளாகும்.

ஃஃஃஃஃஃஃ